# பிப்ரவரி நடப்பு நிகழ்வுகள் – 2018

# தமிழ் வடிவம்












No: 646, 2nd floor, K.K. Nagar, Madurai – 625020 | 7397150273, 8489228855
No: 81, 2nd floor, South Veli Street, Madurai – 625001
9751999264, 0452-4951150/4217492
www.seniasacademy.in

# பிப்ரவரி நடப்பு நிகழ்வுகள்-2018

- மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, February 1,2018ல், 2018 - 2019ம் நிதியாண்டின் மத்திய பட்ஜெட்டை, பார்லிமென்டில் தாக்கல் செய்ய உள்ளார்.
- பட்ஜெட் குறிப்புகள் :
- இந்திய அரசியலமைப்பின் 112ஷரத்து ஆண்டு நிதிநிலை அறிக்கைப் பற்றி கூறுகிறது.
- உண்மையில் பட்ஜெட் என்ற வார்த்தை இந்திய அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை மாறாக ஆண்டு நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிடப்படுகிறது.
- சுதந்திர இந்தியாவின் முதலாவது பட்ஜெட் 1947 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது.
- முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்தவர் இந்தியாவின் முதல் நிதியமைச்சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் ஆவார்.
- ஆங்கிலேயர் காலத்தில் இருந்து பிப்ரவரி மாத கடைசி நாளில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வந்தது. இதை மாற்றி பிப்ரவரி முதல் நாளில் பட்ஜெட் தாக்கல் செய்யும் வழக்கம் 2017 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது.
- இந்திய நாடாளுமன்றத்தில் அதிக முறை பட்ஜெட்டை தாக்கல் செய்த பெருமைக்குரியவர் முன்னால் பிரதமர் மொரார்ஜி தேசாய் ஆவார். இவர் 10 முறை பொது பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளார்.
- சரக்கு சேவை வரி அமலுக்கு வந்த பிறகு தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இதுவாகும்.
- முதல் முதலாக இரயில்வே பட்ஜெட்டை பொது பட்ஜெட்டோடு இணைத்து 2017ஆம் ஆண்டு பிப்ரவரி 1 முதல் ஒருங்கிணைந்த பட்ஜெட்டாக மத்திய ஆரசு தாக்கல் செய்தது. முதல் ஒருங்கிணைந்த பட்ஜெட்டை தாக்கல் செய்தவர் நிதி அமைச்சர் அருண் ஜேட்லி ஆவார்.
- கடைசியாக தனி இரயில்வே பட்ஜெட்டை 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த இரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு ஆவார்.
- பிபேக் தேப்ராய் கமிட்டியின் பரிந்துரையால் தான் ரயில்வே பட்ஜெட் மற்றும் பொது பட்ஜெட் இணைக்கப்பட்டது.
- பட்ஜெட் தாக்கல் செய்ததில் இதுவரையில் இந்திரா காந்தி மட்டும் தான் முதல் மற்றும் ஒரே பெண்ணாக உள்ளார்.
- நாட்டில், ஜி.எஸ்.டி., வரி விதிப்பு அமலானதைத் தொடர்ந்து, தடையற்ற வர்த்தகத்திற்காக, மாநிலங்களின் எல்லைப் புறங்களில் உள்ள சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டன. அதற்கு

பதிலாக, சரக்குகளை அனுப்புவோர், அது குறித்த விபரங்களை, 'இ - வே பில்' எனும் இணைய வழி ரசீதில், அவர்களே சுயமாக குறிப்பிட்டு, எடுத்துச் செல்லும் நடை முறை, அமலுக்கு வருகிறது. மாநிலம் விட்டு மாநிலம், சரக்குகளை எடுத்துச் செல்வதற்கு, இ - வே பில் பெறுவது, நாடு முழுவதும் கட்டாயமாகி உள்ளது.

❖ நாட்டின் கடற்படை பலத்தை மேம்படுத்த, நவீன ரக போர் கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்களை, உள்நாட்டிலேயே தயாரிக்கும் பணிகள் துவங்கி மும்பையில் உள்ள எம்.டி.எல்., நிறுவனத்தில் கட்டப்பட்ட, ஸ்கார்பியன் ரக நீர் மூழ்கி கப்பலான, ஐ.என்.எஸ்., கல்வாரி, கடந்த ஆண்டு டிசம்பரில், கடற்படையில் சேர்க்கப்பட்டது. மற்றொரு நீர் மூழ்கி கப்பலான, காந்தாரி, அறிமுகம் செய்யப்பட்டு, சோதனை ஓட்டத்தில் உள்ளது. உள்நாட்டிலேயே ஏற்கனவே இரண்டு கப்பல்கள் கட்டப்பட்டுவிட்டன. மூன்றாவதாக, ஸ்கார்பியன் ரக நீர்மூழ்கி கப்பலான, கரஞ்ச் வடிவமைக்கப்பட்டு, சோதனை ஓட்டத்திற்கு விடப்பட்டது.

❖ இந்திய விளையாட்டு ஆணையத்தின் (சாய்) இயக்குநராக மூத்த இந்திய தகவல் பணி அதிகாரி நீலம் கபூர் நியமிக்கப்பட்டார்.

❖ 'கேலோ இந்தியா' போட்டியின் முடிவில் ஹரியான மாநிலம் 38 தங்கம் 26 வெள்ளி 38 வெண்கல பதக்கங்கள் வென்று மொத்தம் 102 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. மகாராஷ்டிரா மற்றும் டெல்லி ஆகிய அணிகள் முறையே 2வது 3வது இடங்களை பிடித்தன. இப்போட்டியில் தமிழகம் 6 தங்கம் 11 வெள்ளி 11 வெண்கல பதக்கங்களை வென்று மொத்தம் 28 பதக்கங்களுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளது.

❖ ஆஷ்காபாத் ஒப்பந்தத்தில் இணைந்தது இந்தியா. ஆஷ்காபாத் ஒப்பந்தம் ஈரான், ஓமன், துர்மெனீஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து சர்வதேச வர்த்தகத்தினை மேம்படுத்த 2011-ம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டன. இந்த ஒப்பந்தத்தில் இந்தியா இணைந்து கொள்ள வலியுறுத்தியது. ஆஷ்காபாத் ஒப்பந்தத்தில் இந்தியாவை சேர்த்துக்கொள்வதற்கான கோரிக்கையை நான்கு நாடுகளும் ஏற்றுக்கொண்டன. பிப்.3-ம் தேதி முதல் இந்த ஒப்பந்தம் அமலுக்கு வருகிறது.

❖ அசாமில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு('Advantage Assam'), வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் விதமாக அசாமில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டை பிரதமர் மோடி துவக்கி வைக்கிறார்.

❖ “Exam Warriors” என்ற புத்தகத்தை தேர்வுகளை சந்திக்கும் மாணவர்களுக்காக பிரதமர் மோடி எழுதியுள்ளார்.

# பிப்ரவரி நடப்பு நிகழ்வுகள்-2018

- உத்திரப்பிரதேச மாநில அரசு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு மாநிலத்தின் முதல் வண்ணத்துப்பூச்சி பூங்காவை கான்பூரில் தொடங்கிவுள்ளது.

- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் இணை செயலாளர் விக்ரம் சிங் சிச்சோடிய வரவிருக்கும் காமன்வெல்த் போட்டிகளின் முதன்மையளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- மத்திய மந்திரி ராஜ்நாத் சிங் புது டெல்லியில் "Mere Sapno Ka Bharat" என்ற புத்தகத்தை வெளியிட்டார். இந்த புத்தகம் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் பிரபலமான நேர்காணல்களின் தொகுப்பாகும். இது முன்னாள் எம்.பி. தருண் விஜய் அவர்களால் எழுதப்பட்டது.

- ஆஸ்திரேலியாவுக்கு எதிரான யு-19 ஜூனியர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதிச்சுற்றை இந்திய அணி வென்று கோப்பையை கைப்பற்றியுள்ளது. மேலும், 4 முறை சாம்பியன் ஆன ஒரே அணி என்ற பெருமையும் பெற்றது.

- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கொல்லரு ஏரியில் உள்ள அட்டபாகா(Atapaka) பறவைகள் சரணாலயத்தில் முதன்முதலாக 'பெலிகன் பறவை திருவிழா' நடைபெற்றது.

- ஆசிய பல்கலைக்கழக தரவரிசையில் சென்னை ஐ.ஐ.டி. 41 இடங்கள் சறுக்கி 103–வது இடத்தை பிடித்தது. சிங்கப்பூரை சேர்ந்த தேசிய பல்கலைக்கழகம் முதல் இடத்தை பிடித்து உள்ளது. சீனாவின் சிங்குவா பல்கலைக்கழகம் 2–வது இடத்தை பெற்றது. இந்தியாவை சேர்ந்த 42 பல்கலைக்கழகங்கள் இந்த தரவரிசையில் இடம் பெற்றுள்ளன.

- 2018-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் ஏப்ரல் 4 முதல் 15 வரை நடைபெறவுள்ளது.

- ஒடிசா மாநிலம் அருகே வங்க கடல் பகுதியில் உள்ள அப்துல் கலாம் தீவில் அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ப்ரித்வி -2 ஏவுகணை சோதனை செய்யப்பட்டது . உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட ப்ரித்வி -2 ஏவுகணை 500 லிருந்து 1000 கிலோ கிராம் எடையுள்ள அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது . இந்த ஏவுகணை 350 கி. மீட்டர் தூரத்தில் உள்ள இலக்கை கூட தாக்கி அழிக்கவல்லது.

- உலகின் மிக சக்தி வாய்ந்த அதிக வேகத்தில் செல்லும் புதிய ரக ஃபெல்கான் ராக்கெட்டை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் -தயாரித்துள்ளது. இந்த ராக்கெட் மற்ற ராக்கெட்களை விட அதிக எடை கொண்ட செயற்கைக்கோள்களை சுமந்து செல்லும் திறன் கொண்டது அது .1 லட்சத்து 40 ஆயிரம் பவுண்ட எடையுடன் பூமி வட்டப்பாதையை சுற்றி வரும் வகையில்

வடிவமைக்கப்பட்டுள்ளது செவ்வாய்க்கிரகத்திற்கு .40 ஆயிரம் பவுண்ட எடையுடன் சுற்றி வரும் திறன் கொண்டது. இந்த ராக்கெட்டில் Tesla Roadster car அனுப்பப்பட்டுள்ளது.

❖ அரசின் லோகோவுடன் கர்நாடக மாநிலத்துக்கு மஞ்சள் , வெள்ளை மற்றும் சிவப்பு நிறங்கள் அடங்கிய தனி மூவர்ண கொடியை 9 பேர் கொண்ட குழு பரிந்துரைத்துள்ளது.

❖ இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் ஜூலன் கோஸ்வாமி சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 200 விக்கெட்களை வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ளார்.

❖ உடல் ஆரோக்கியம் தொடர்பாக உலக வங்கி , மத்திய சுகாதார அமைச்சகம் நடத்திய ஆய்வுகளின் அடிப்படையில் NITI Aayog-ன் சுகாதார குறியீடு அறிக்கை தயாராகி உள்ளது. இதன்படி, பெரிய மாநிலங்களில் உடல் ஆரோக்கியத்தில் முதல் இடத்தை கேரள மாநிலம் பெற்று உள்ளது. இரண்டாவது இடத்தை பஞ்சாப் மாநிலம் பிடித்தது. மூன்றாவது இடம் தமிழ்நாட்டுக்கு கிடைத்து உள்ளது . சிறிய மாநிலங்களில் மிசோரம் , மணிபூர் , மேகாலயா முறையே முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன. யூனியன் பிரதேசங்களில் லக்ஷதீப் , சண்டிகர் , டெல்லி முறையே முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளன.

❖ சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் முதல் தனிப்பட்ட பெண் இயக்குனராக பெப்சி நிறுவனத்தின் சேர்மன் இந்திரா நூயி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரது பதவிக்காலம் 2 ஆண்டுகள் ஆகும்.

❖ ரேவா சோலார் பூங்கா மத்தியப்பிரதேச மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது 750 .மெகாவாட் சக்தி கொண்ட ரேவா சோலார் பார்க் உலகின் மிகப்பெரிய சூரிய பூங்காக்களில் ஒன்றாகும்.

❖ 'நியூ வேர்ல்டு ஹெல்த் ' என்ற சர்வதேச அமைப்பு , உலகில் உள்ள , பணக்கார நகரங்கள் குறித்து ஆய்வு நடத்தி , நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் , நியூயார்க், முதல் இடத்தை பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தை , லண்டன் நகரம் பெற்றுள்ளது. டோக்கியோ , மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது. நம் நாட்டில் மும்பை நகரம், 12வது இடத்தை பிடித்துள்ளது.

❖ இந்திய மற்றும் இந்தோனேசிய இராணுவத்தின் சிறப்புப் படைகள் தங்களது 6வது கருட சக்தி பயிற்சியை இந்தோனேசியாவின் பாண்டுங்கில் தொடங்கியது.

# பிப்ரவரி நடப்பு நிகழ்வுகள்-2018

- ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 400 விகேட்டுகளை ஸ்டம்பிங் செய்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையை தோனி பெற்றார். மேலும் உலகவா அளவில் இந்த சாதனையை படைத்த நான்காவது வீரர் இவரே ஆவர். இதற்க்கு முன் கில்க்ரிஸ்ட், குமார் சங்கக்காரா, மார்க் பௌச்சர் ஆகியோர் இச்சாதனையை படைத்துள்ளனர்.

- குஜராத் பல்கலைக்கழகம் நாட்டிலேயே முதல் முறையாக பழமையான சமஸ்கிரத மொழியை பேசுவதற்கான பயிற்சியை அளிக்கவுள்ளது.

- தெற்கு மத்திய ரயில்வே (SCR) அதன் அதிகார எல்லைக்குள் உள்ள அனைத்து நிலையங்களிலும் 100% LED விளக்குகளைப் பொருத்திய நாட்டின் முதல் இரயில் மண்டலமாக மாறியுள்ளது.

- பீகார் மாநில அரசு மாநிலத்தில் சிகரெட்டுகளை தனி தனியாக விற்க தடைவிதித்துள்ளது. இதற்கு தடை விதிக்கும் 12வது மாநிலம் பீகார் ஆகும்.

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு )CCEA) பிரதான் மந்திரி உஜ்ஜ்வால யோஜனாவின் இலக்குகளை அடைவதற்கு தேவையான நிதியை 5 கோடியில் இருந்து 8 கோடியாக உயர்த்துவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது திருத்தப்பட்ட இந்த இலக்கு .PMUY 2020 .க்குள் அடையப்படும்

- எந்த வங்கியிலும் ஆதாரை பதியும் வசதி வங்கிகளில் செயல்படும், ஆதார் மையங்களில், வேறு வங்கி வாடிக்கையாளர்கள், வங்கிக் கணக்கே இல்லாத பொதுமக்களும், ஆதார் பதிவு மற்றும் திருத்தங்களை செய்யலாம்.

- ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் மத்தியபிரதேச மாநிலத்தின் குவாலியர் மாவட்டத்தை திவ்யாங் நட்பு மாவட்டமாக (Divyang friendly district) அறிவித்துள்ளார்.

- சமீபத்தில் உலகின் முதல் ரோபோ ஸ்கை போட்டி தென் கொரியாவில் நடைபெற்றது.

- இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலின் )ICHR) அடுத்த தலைவராக தொல்பொருள் அறிஞர் மற்றும் வரலாற்றாசிரியர் அரவிந்த் பிஜம்ஹெத்கர் . பொறுப்பேற்பார்.

- உத்திரப்பிரதேச மாநிலம் கான்பூரில் உள்ள சந்திரஷேகர் ஆசாத் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் சர்வதேச 'அக்ரிகான் 2018' மாநாடு மற்றும் 'அக்ரி எக்ஸ்போ 2018' ஆகியவற்றினை இந்தியத் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தொடங்கிவைத்தார்.

- இந்திய கடற்படை, விமானப்படை, இராணுவம் மற்றும் கடலோர காவல்படை ஆகியவற்றுக்கு இடையேயான பரிமாற்றத்தை உருவாக்குவதன் நோக்கமாக இந்தியாவின் மேற்குக் கடற்க்கரையோரத்தில் 'பாசிம் லெஹர் ' என்ற கூட்டு கடற்படை பயிற்சி நடத்தப்பட்டது.

- இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததற்குப் பின் முதல் முறையாக சத்தீஸ்கர் மாநிலத்தின் பால்ராம்பூர் மாவட்டத்தில் உள்ள பாலுபனி என்ற கிராமத்திற்கு மின்சாரம் கிடைத்துள்ளது.

- பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் விளம்பர தூதராகவும், பாகிஸ்தான் கிரிக்கெட் விவகாரப்பிரிவின் தலைவருக்கு ஆலோசகராகவும் பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- மாண்டரின் மொழியை பாகிஸ்தானின் அதிகாரப்பூர்வ மொழிகளில் ஒன்றாக அறிவிக்கும் தீர்மானத்திற்கு பாகிஸ்தானின் செனட் அவை ஒப்புதல் அளித்துள்ளது.

- பாரதி ஏர்டெல் மற்றும் சீனாவின் டெலிகாம் சாதன உற்பத்தி நிறுவனமான ஹவாய் நிறுவனம் இணைந்து இந்தியாவில் முதல் 5G பயன்பாட்டு சோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது. இந்த 5G சேவை வினாடிக்கு 3GB இணைய வேகத்தில் உள்ளது எனக் கூறப்படுகிறது.

- சுதந்திர இந்தியாவில் தமிழகத்தின் முதல் முதல்வரான ஓமந்தூர் பி. ராமசாமி ரெட்டியாரின்(மார்ச் 23,1947 முதல் ஏப்ரல் 6,1949) பிறந்தநாளை முதல் முதலாக அரசு விழாவாக கொண்டாட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

- தமிழகத்தின் புதிய தலைமை தேர்தல் அதிகாரியாக முன்னாள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு வாரியத்தின் நிர்வாக இயக்குனர் திரு. சத்யபிரத சாஹு (IAS, சொந்த மாநிலம்- ஓடிஷா) நியமிக்கப்பட்டுள்ளார்.

- நியூ வேர்ல்ட் வேல்த் எனும் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள உலக பணக்கார நாடுகள் பட்டியலில் இந்திய 6வது இடத்தைப் பிடித்துள்ளது. உலகின் பணக்கார நாடாக அமெரிக்க முதலிடம் பெற்று விளங்குகிறது. 2வது மற்றும் 3வது இடத்தில் முறையே சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்த்துறை அமைச்சகமானது அரசு மின் சந்தையின் (Government e-Marketplace-GeM 3.0) மூன்றாவது பதிப்பை வெளியிட்டுள்ளது.

- பொருளாதார நிபுணர் உளவுத்துறை அலகு ( Economist Intelligence Unit-EIU) எனும் இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனம் வெளியிட்ட 2017க்கான உலகளாவிய ஜனநாயக

குறியீட்டில் ( Global Democracy Index) உலகின் 165 சுதந்திர நாடுகளில் இந்தியா 42 வது இடம் பிடித்துள்ளது.

- இந்திய ஆற்றல் மாநாடின் (Indian Energy Congress) ஏழாவது பதிப்பு அண்மையில் புது தில்லியில் நடைபெற்றது. இதன் கருப்பொருள் 'Energy 4.0: Energy Transition Towards 2030'.

- உச்சநீதி மன்ற தலைமை நீதிபதியால் அவமக்கப்பட்ட நீதிபதிகள் அடங்கிய விசாரனைக் குழுவானது அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி நாராயணன் சுக்லா மீதான குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து, எதிர்மறை அறிக்கை ஒன்றை அளித்துள்ளதன் அடிப்படையில் நாராயணன் சுக்லாவை தகுதி நீக்கம் செய்வதற்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்துள்ளார்.

- முதல் சர்வதேச கலா மேளா திருவிழா (International Kala Mela) புதுதில்லியில் லலித் கலா அகடமியால் நடத்தப்பட்டது.

- சோலார் மின் உற்பத்தியை மேற்கொள்ள விவசாயிகளை ஊக்குவிக்க கிசான் உர்ஜா சுரக்ஷா இவம் உத்தான் மஹாபியான் ( Kisan Urja Suraksha evam Utthaan Mahaabhiyan) என்ற திட்டத்தை துவங்க உள்ளது.

- US சாம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பினால் வெளியிடப்படும் 2018க்கான சர்வதேச அறிவுசார் சொத்துரிமை குறியீட்டில் (International Intellectual Property index) 50 நாடுகளுள் இந்திய 44-வது இடத்தைப் பிடித்துள்ளது.

- ஆறாவது ஹுனார் ஹாத் கண்காட்சி புது டில்லியில் நடைபெற்றது . ஹுனார் ஹாத் கண்காட்சி என்பது சிறுபான்மையின சமூகத்தைச் சார்ந்த கைவினைக் கலைஞர்கள் தங்களது படைப்புகளைக் காட்சிபடுத்தவும் விற்பனை செய்யவும் அரசாங்கத்தால் துவங்கப்பட்டதாகும்.

- ஐக்கிய அரபு எமீரகத்தின் தலைநகரான அபுதாபியில், அல் வாத்பா எனும் நகரில் முதல் பாரம்பரியமான இந்துக் கோவில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் விழாவை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

- இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 31 முதலமைச்சர்களில் பணக்கார மற்றும் ஏழை முதலமைச்சர்களின் பட்டியலில்:

  பணக்கார முதலமைச்சர்கள்:

1) ஆந்திரா முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு

2)அருணாச்சல் பிரதேச முதல்வர் பேமா காந்து

ஏழை முதலமைச்சர்கள்:

1) திரிபுரா முதல்வர்(முன்னாள்) மாணிக் சர்கார்

2) மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி

3) ஜம்மு காஷ்மீர் முதல்வர் மேஹபூபா முப்தி

மொத்தம் 10% பெண் முதல்வர்களே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்தியாவின் முதல் ஆன்லைன் ரேடியோ நிலையம் "ரேடியோ உமாங்க்" உலக ரேடியோ தினத்தன்று(பிப்ரவரி 13) தொடங்கிவைக்கப்பட்டது. இந்த "ரேடியோ உமாங்க்" கின் கருப்பொருள் அமைதி, மனிதநேயம், நம்பிக்கை ஆகியவையாகும்.
- 8வது மேடைக் கலைகளுக்கான உலக ஒலிம்பிக்கை புது டில்லியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் கருப்பொருள் "Flag of Friendship". முதல் மேடைக் கலைகளுக்கான உலக ஒலிம்பிக் 1993ல் கிரீஸ் நாட்டில் உள்ள தேல்பி நகரில் நடைபெற்றது.
- துபாயில் நடைபெற்ற 6வது உலக அரசாங்க மாநாட்டில் இந்தியாவின் ஆதார் மற்றும் உமாங் செயலிக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.
- உலக நீடித்த வளர்ச்சிக்கான மாநாட்டின் முதல் பதிப்பு இந்த ஆண்டு புது டில்லியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாநாட்டின் கருப்பொருள் 'Partnerships for a Resilient Planet'.
- மத்திய அரசு நிலத்தடி நீர்மட்டக் குறைவு மேலாண்மைக்காக அடல் பூஜல் யோஜனாவை தொடங்கிவுள்ளது.
- புது டில்லியில் உள்ள தேசிய வேளாண்மை அறிவியல் கழகத்தில் "Agriculture 2022 – Doubling Farmers' Income" என்ற தலைப்பில் தேசிய மாநாடு, தேசிய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- ஹைதராபாத்தில் தகவல் தொழில்நுட்பம் மீதான உலக கருத்தரங்கை (World Conference on Information Technology) காணொளிக் காட்சி மூலம் பிரதமர் தொடங்கி வைத்தார். இம்மாநாட்டின் கருப்பொருள் "Future Enterprises" என்பதாகும். இம்மாநாட்டில் உலகின் முதல் குடியுரிமை பெற்ற சௌதி அரேபியாவைச் சேர்ந்த மனித ரோபோ சோபியா பங்கேற்றது.

- இந்திய விமான படைக்குச் சொந்தமான “MiG-21 Bison” ரக போர் விமானத்தை தனியாக இயக்கிய முதல் பெண் விமானி என்ற பெருமையை பெண் விமானி அவனி சதுர்வேதி பெற்றார்.

- சர்வதேச வெளிப்படைத் தன்மைக்கான அமைப்பால் வெளியிடப்படும் உலகளாவிய ஊழல் தொடர்பான குறியீடு 2017ல் (Global corruption perception index for 2017) இந்திய 81வது இடத்தில் உள்ளது.

- ஓடிஷாவின் பாரதீப் துறைமுகத்தில் நடைபெற்ற விழாவில் 30 ஆண்டுகளாக கடலோரப் பாதுகாப்பு படையில் பணியாற்றி வந்த வஜ்ரா கப்பல் அதன் பணியிலிருந்து ஒய்வு பெற்றுள்ளது.

- வங்கக்கடலில் ஓடிஷா கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலிலிருந்து , அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடிய 350கி.மீ. சென்று தாக்கக்கூடிய தனுஷ் ஏவுகணை வெற்றிகரமாக சொத்தை செய்யப்பட்டது.

- புதிய யுனிசெப் அறிக்கைப்படி, இந்தியாவில் பச்சிளங்குழந்தைகள் இறப்பு வீதம்(Neonatal mortality rate) 1000 உயிர் பிறப்புகளுக்கு 25.4 இறப்புகள் என்ற அளவில் உள்ளது. இதனால் குறைவான நடுத்தர சம்பாத்தியம் பெரும் 52 நாடுகளுள் இந்தியா 12வது இடத்தில் உள்ளது.

- சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியின்(International Solar Alliance) முதல் மாநாட்டை மார்ச் 11 அன்று புது டில்லியில் இந்திய நடத்தியது.

- 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு “பால் ஆதார்” என்ற பெயரில் நீல நிற ஆதார் அடையாள அட்டையை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு குழந்தையின் எந்த ஒரு பயோமெட்ரிக் அடையாளமும் பதிவி செய்யப்படுவதில்லை.

- 16 நாடுகள் பங்குபெறும் மிலன் எனும் பன்னாட்டு கூட்டுப் போர் பயிற்சியை இந்திய கடற்ப்படை, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் போர்ட் பிளேயரில் மார்ச் 6 முதல் 13 வரை நடத்தியது.

- மத்திய அரசாங்கம் வடகிழக்கு மாநிலங்களுக்கான நிதி ஆயாக் மன்றத்தை உருவாக்க அனுமதி வழங்கிவுள்ளது. இந்த மன்றத்தின் தலைவர்களாக நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் மற்றும் மத்திய வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் இணை அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- மகாநதி நதியின் நீரை பகிர்ந்து கொள்ள ஓடிஷா மற்றும் சத்தீஸ்கர் மாநிலத்திற்கும் இடையே நிலவும் பிரச்சனையை தடுக்க நதிநீர் பங்கீட்டுத் தீர்ப்பாயம் அமைப்பதற்கு மத்திய கேபிநேட் ஒப்புதல் வழங்கியது.

- பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்திற்கு நிதியளிப்பதற்க்காக ரூபாய் 60000 கோடி மதிப்பிலான தேசிய நகர்ப்புற வீட்டு வசதி நிதியத்தை ஏற்ப்படுத்த மத்திய கேபிநேட் ஒப்புதல் வழங்கியுள்ளது. பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் வரும் 2022க்குள் நகர்ப்புறங்களில் 1.2கோடி வீடுகள் கட்டிமுடிக்க இலக்கு நிர்நியக்கப்பட்டுள்ளது.

- உலக உணவுத் திட்டத்திற்காக 370 மில்லியன் டாலர்களை அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு வழங்குவதற்காக ஸ்வீடன் அரசு ஐ.நா.வின் உலக உணவு திட்ட அமைப்புடன் ஒப்பந்தம் மேற்க்கொண்டுள்ளது.

- தெற்கத்திய நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்ப்படுதுவதற்க்காக அமைக்கப்பட்ட இந்தியா – ஐ.நா. மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதியத்திற்கு இந்தியா கூடுதலாக 1மில்லியன் டாலர்களை வளங்கிவுள்ளது.

- இந்தியாவின் அண்டை நாடான இலங்கை தனது 70வது சுதந்திர தினத்தை பிப்ரவரி 4ம் தேதி கொண்டாடியது. இதன் கருப்பொருள் “One Nation” என்பதாகும்.

- தன் மக்களுக்கு உலகளாவிய கண் சிகிச்சை பராமரிப்பு சேவையை வழங்கவுள்ள உலகின் முதல் குறைந்த வருவையுடைய நாடாக ருவாண்டா உள்ளது.

- மாலத்தீவு அதிபரான அப்துல்லா யாமீன் அந்நாட்டில் 15நாள் தேசிய நெருக்கடி நிலையை அமல்படுத்தினார்.

- அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியின் 16 வது புதிய தலைவராக ஜெரோம் எச். போவெல் நான்காண்டு பதவிகாலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

- தான்சானியா அரசு நிதிப் பற்றாக்குறை மற்றும் பாதுகாப்பு தொடர்பான விவகாரம் காரணமாக ஐ.நா.வின் ‘விரிவான அகதிகள் பதில் கட்டமைப்பிலிருந்து’(United Nation’s “Comprehensive Refugee Response Framework”) விலகுவதாக அறிவித்துள்ளது.

- அமெரிக்காவுக்கு போட்டியாக சீனா தயாரித்துள்ள ஜே -20 அதிநவீன போர் விமானங்கள் , அந்நாட்டு விமானப்படையில் சேர்க்கப்பட்டுள்ளன .அமெரிக்காவின் அதிநவீன போர் விமானமான எப்-22 ராப்டாரை எதிர்கொள்ளும் வகையில் , சீனா தனது விமானப்படைக்காக

ஜே-20 என்ற நவீன போர் விமானத்தை தயாரித்துள்ளது எதிரிகளை .குண்டுவீசி தாக்கவும் , வானில் எதிரி போர் விமானங்களை இடைமறித்து தாக்கும் திறனுடன் இந்த விமானங்கள் உருவாக்கப்பட்டு, படையில் சேர்க்கப்பட்டுள்ளன இவை .போருக்கு முழு அளவில் தயாராக உள்ளதாக சீன ராணுவம் தெரிவித்துள்ளது.

- 23வது தேசிய சீனியர் பெண்கள் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஒடிசா மாநிலம் கட்டாக்கில் நடைபெற்றது. இதில் முதன்முறையாக தமிழக அணி நடப்பு சாம்பியன் மணிப்பூரை வீழ்த்தி சாம்பியன் பட்டதை வென்றது(மணிப்பூர் அணி இதுவரை 18முறை சாம்பியன் பட்டதை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது).

- நடப்பாண்டின் ஜூன் மாதத்தில் 2018ம் ஆண்டிற்கான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின்(Shanghai Cooperation Organization) மாநாட்டை சீனா நடத்தவுள்ளது.இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், இந்தியா மற்றும் பாகிஸ்தான்ஆகிய நாடுகள் முழுநேர உறுப்பினர்களாக உள்ளனர்.

- தென்கொரிய தலைநகர் பியோங்சாங்கில் நடைபெற்று வரும் 23வது சர்வதேச குளிர்கால ஒலிம்பிக் தொடரில் நோரோ வைரஸின் நோய் தாக்குதல் இருந்துள்ளது. இந்த வைரஸ் ரோடா வைரஸை ஒத்தது போல வயிற்றுப்போக்கை ஏற்படுத்தக்குடியது.

- நேபாளத்தின் 41வது பிரதமராக K.P. சர்மா ஒளி பதவியேற்றுள்ளார். இதோடு இவர் 2வது முறையாக நேபாளத்தின் பிரதமராக பதவியேற்கிறார்.

- இந்திய தாவரவியல் கணக்காய்வு நிறுவன அறிஞர்கள் புதிய தாவர இனத்தை கண்டுபிடித்துள்ளனர் , அதற்கு அப்துல் கலாம் அவர்கள் நினைவாக டிரைபேடஸ் கலாமி என பெயரிட்டுள்ளனர்.இந்த தாவரம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் ஜல்டாபாரா மற்றும் பக்ஸா தேசிய பூங்கா (மேற்கு வங்காளம்).

- சுற்றுசூழல் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு உடனடி தீங்கை ஏற்ப்படுத்தக்கூடிய இருபது பூச்சி கொல்லி மருந்துகளை பஞ்சாப் அரசு தடை செய்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் புவியியல் பரப்பின் உலக சிறப்பு விருதினை ஒடிஸா மாநிலம் வென்றுள்ளது.உலக புவியியல் பரப்பு மன்றத்தின் சந்திப்பு ஹைதராபாத்தில் நடைபெற்றது.

- திருநங்கைகளின் அரசியல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் விதமாக மகாராஷ்டிரா அரசு திருநங்கை நல வாரியத்தை நாட்டிலேயே முதலாவதாக அமைத்துள்ளது.

- 32 வது ஆண்டு சுராஜ்கண்ட் கைவினை திருவிழா நடைபெற்ற இடம் ஹரியானா. இந்த ஆண்டு கருத்துரு மாநிலமாக உத்திரபிரதேச மாநிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

- பாகுபலியின் ஒற்றைக்கல் சிலைக்கான 88வது மகாமஸ்தகபிஷாகா திருவிழா கர்நாடகாவின் சரவணபெலகோலவில் நடைபெற்றது.

- சமுக தொடர்புகொள்ள ஊடகம் மூலமாக இளைஞ்கர்களோடு மகாராஷ்டிரா அரசாங்கம் ''சமுக ஊடகம்-மகாமித்ரா'' என்னும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது

- இந்திய சுற்றுலாதுறை மற்றும் வனவிலங்கு சமூகம் இணைந்து ராஜஸ்தானில் ஜெய்ப்பூரில் உள்ள மான் சாகர் ஏரியில் 21வது இந்திய பறவைகள் கண்காட்சியை ஏற்ப்படுத்தியுள்ளது.

- மணிப்பூர் மாநிலத்தின் முதல் பெண் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக அபிலாச குமாரி பதவிஏற்றுள்ளார்.

- ''இந்திய மருந்து பொருட்கள் மற்றும் இந்திய மருத்துவ சாதனங்கள் 2018'' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு பெங்களூருவில் நடைபெற்றது.

- மேகாலயாவில் உள்ள இந்திய-வங்கதேச எல்லையில் 'நட்பு-கதவுகள்' திறக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் வாகா எல்லையில் நடைபெறும் கொண்டாட்டத்தை போல இங்கும் எல்லை காவல் படைகளால் இருநாடும் நட்போடு இணங்கி போதல்.

- மத்திய பிரதேச மாநிலத்தின் முதல் பட்டாம் பூச்சி பூங்கா ரைசின் மாவட்டத்தில் உள்ள கோபால்பூரில் தொடங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு மையம் மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் அமைக்கப்பட உள்ளது.

- 2018ஆம் ஆண்டின் தேசிய வாழைப்பழ திருவிழா கேரளாவில் திருவனந்தபுரத்தில் உள்ள கல்லியூரில் நடைபெற்றது.

- கோவா அரசு கடற்க்கரை பகுதிகளில் விரைவான மருத்துவ சேவை கிடைக்க இருசக்கர ஆம்புலன்ஸ் சேவையை தொடங்கியுள்ளது.

- ஹரியானா அரசாங்கம் ''அந்தியோதயா ஆகார் யோஜனா' என்னும் பத்து ருபாயில் உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கியுள்ளது.

- 2018ஆம் ஆண்டின் 44வது காஜுு ராகோ நடன திருவிழா மத்திய பிரதேசத்தில் உள்ள சத்தர்பூரில் நடைபெறுகிறது.

- ஒற்றை கொம்பு காண்டமிருகங்களின் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு ஏற்ப்படுத்த அஸ்ஸாம் மாநில செப்டம்பர் 22-ஐ ரைனோ தினமாக கடைப்பிடிக்கிறது.

- குஜராத் மாநில சட்டமன்ற சபாநாயகராக ராஜேந்திர திரிவேதி தேர்ந்தேடுக்கப்பட்டார்.

- ஹரியானா அரசு சுகாதாரம் உட்பட 10 பிரச்சனைகளை குறிப்பிட்டு காட்டுவதற்கு பரிவர்தன் திட்டத்தை தொடங்கியுள்ளது.

- 45வது இந்திய கைவினை மற்றும் பரிசு கண்காட்சி டெல்லியில் உள்ள கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்றது.

- உள்நாட்டு உற்பத்தி பொருட்களை முன்னேற்ற ''ஒரு மாவட்டம் ஒரு உற்பத்தி பொருள்'' என்ற திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் உத்தரபிரதேச அரசாங்கம் தொடங்கியுள்ளது.

- குடும்ப சுகாதாரம் சார்ந்த துறையில் மிகச்சிறந்த சேவையாற்றியமைக்காக உலக சுகாதார நிறுவனத்தின் 'இசான் டோக்ரோமாசி குடும்ப நல விருதினை'' நிதி ஆயோக்கின் உறுப்பினரான வினோத் பவுல் பெற்றார்.

- மாஹாயி மொழி எழுத்தாளரான சேஸ் ஆனந்த் மதுகருக்கு சாஹித்திய அகாடமியின் 2018 ஆம் ஆண்டு பாஷா சம்மன் விருது வழங்கப்பட்டுள்ளது .இவ்விருதினை பெரும் இரண்டாவது மஹாயி எழுத்தாளர் இவர்.

- மத்திய சாகித்ய அகாடமி அமைப்பின் தலைவராக பொறுப்பு வகித்த இந்தி எழுத்தாளர் விஸ்வநாத் பிரசாத் திவாரியின் பதவிக்காலம் கடந்த டிசம்பர் 31-ம் தேதியுடன் முடிவடைந்தது . இதையடுத்து புதிய தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில் கன்னட எழுத்தாளர் சந்திரசேகர கம்பாரா வெற்றிப்பெற்றுள்ளார்.

- பிரேசில் நாட்டிற்க்கான இந்திய தூதராக அசோக் தாஸ் நியமியக்கப்பட்டுளார்.

- கிரான்ட் மாஸ்டர் விதத் குஜராத்தி அகில இந்திய பார்வையற்றோர் செஸ் கூட்டமைப்பின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரியக் குறுவிநியோக தளமான மில்க் பாஸ்கட் 2017ஆம் ஆண்டின் சிறந்த ஸ்டார்ட் அப் நிறுவனம் என்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது .

- கிருஷ்ணா குமார் கோலி என்ற பெண் பாகிஸ்தானின் முதல் தலித் செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் ,இவர் அந்த செனட்டின் இரண்டாவது இந்து உறுப்பினரும் ஆவார் . முதல் இந்து நபர் ரத்னா பகவன்தாஸ் சாவ்லா.

- நடிகை ஸ்ரீதேவி துபாயில் காலமானார். இவரது முதலாவது திரைப்படம் தமிழில் 'துணைவன்' 1969. இவர் மத்திய அரசின் நான்காவது மிக உயர்ந்த விருதான பத்ம ஸ்ரீ விருதை 2013ல் பெற்றார்.

- தூய்மை இந்தியா திட்டத்தின் தூதர் குன்வர் பாய் (106) காலமானார்.

- 2018ஆம் ஆண்டின் வது பதிப்பின்7911ஈவன் ஸ்போர்ட்ஸ் தேசிய சீனியர் டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் தமிழ்நாட்டு வீரர் அஜந்தா சரத் கமல் வென்றுள்ளார்.

- உலகளவில், ராணுவ பட்ஜெட்டிற்கு அதிக ஒதுக்கீடு செய்யும் முதல் ஐந்து நாடுகளின் பட்டியலில் முதல் முறையாக இந்தியா இடம் பெற்றுள்ளது. பிரிட்டனை பின்னுக்கு தள்ளி ஐந்தாவது இடத்தை இந்தியா கைப்பற்றியுள்ளது.
  முதல் நான்கு இடங்கள்:
  1) அமெரிக்க
  2) சீனா
  3) சௌதி அரேபியா
  4) ரஷ்யா

- ஊழல் புகாரில் சிக்கிய தென் ஆப்பிரிக்க அதிபர் ஜேக்கப் ஷூமா அதிபர் பதவியை ராஜினாமா செய்ததை அடுத்து , புதிய அதிபராக துணை அதிபர் சிரில் ராமபோசா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- வெனிசுல அரசு உலகிலேயே முதல்முறையாக தனக்கென பெட்ரோ(PETRO) என்ற ஒரு மாய செலவணியை(BITCOIN) ஏற்றுக்கொண்டுள்ளது.

- ஜப்பானின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் உலகின் மிகச் சிறிய செயற்க்கைகோளை சுற்றுவட்டப்பாதையில் நிலை நிறுத்தும் திறனுடைய உலகின் மிகச் சிறிய ராக்கெட்டை தயாரித்து அந்த சிறிய ராக்கெட்டின் மூலம் -MOCIRTIK என்ற சிறிய செயற்க்கைகோளை விண்ணில் நிலை நிறுத்தியுள்ளது.

- 2018 ஆம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினம் ) WED) ஜூன் மாதம் 5 ஆம் தேதி அனுசரிக்கப்படும் .இந்த ஆண்டு உலகளவில் இந்தியா இதன் ஓம்பு நகரமாக(Global host) உள்ளது. இந்த இந்த ஆண்டுக்கான மைய கருப்பொருள் 'பிளாஸ்டிக் மாசுபாடு'

- வடகிழக்கு மாநிலங்களில் முதல்முறையாக மிசோராமில் இஸ்ரேல் ஒத்துழைப்புடன் வேளாண்மைக்கான முதல் மையம் அமைக்கப்படும் என்று இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர்

திருடேனியல் கார்மோன் . தெரிவித்தார் இதில் முழுக்க முழுக்க .சிட்ரஸ் பழங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

- சிங்கப்பூர் அரசாங்கம் காலநிலை மாற்றங்களுக்கு வித்திடும் கிரீன்ஹவுஸ் வாயுவின் வெளியேற்றத்தைக் குறைக்கும் வகையில் வரும் 2019 ஆண்டு முதல் "கார்பன் வரி" விதிக்க திட்டமிட்டுள்ளது.

- மகாராஷ்டிரா மாநில அரசு சந்திராபூர் மாவட்டத்தில் உள்ள கோதசாரியை புதிய வனவிலங்கு சரணாலயமாக அறிவித்துள்ளது.

- வருடாந்திர பன்னாட்டு கூட்டு இராணுவ பயிற்சி கோப்ர கோல்ட் பயிற்சி தாய்லாந்தின் சோன்புரி மாகாணத்தில் நடைபெற்றது. இது 37வது பதிப்பாகும் இப்பயிற்சியை ராயல் தாய் ஆயுதப்படையும், அமெரிக்க ஆயுதப்படையும் இணைந்து வழங்குகின்றன.

- பூமியின் அறிவியல் அமைச்சகமானது மிஹிர் என்று அழைக்கப்படும் உயர் செயல்திறன் கணினி (ஹெச்பிசி) அமைப்பு (சன் என்ற பொருள்) நிறுவியுள்ளது, இது நடுத்தர ரேஞ்ச் வானிலை மையம் (NCMRWF) தேசிய மையத்தில் உள்ளது.

- முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டின் இரண்டாவது மற்றும் கடைசி நாளில்- ' e-Saathi' எனும் ஒரு மொபைல் செயலி தொடங்கப்பட்டது. இந்த செயலி மூலம், மக்கள் வீட்டில் இருந்து கொண்டே பொது சேவைகளைப் பெற முடியும்.

- சுற்றுச்சூழல், வனத்துறை மற்றும் காலநிலை மாற்ற மத்திய அமைச்சகம் புது டெல்லியில் பசுமை நல்ல செயல்திட்டங்களைத் (Green Good Deeds campaign) தொடங்கியது.

- மெல்போர்னில் நடைபெற்ற 2018 உலகக்கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்திய வீராங்கனை அருணா ரெட்டி வெண்கலப் பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

- பயணிகளை கையாளும் வகையில் துபாய் சர்வதேச விமான நிலையம் உலகின் மிகப்பெரிய பரபரப்பான விமான நிலையமாக பட்டியலிடப்பட்டுள்ளது லண்டன் ஹீத்ரோ விமான . .நிலையம் இரண்டாவது பரபரப்பான விமான நிலையமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது

- மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையம் ஒரு நாளில் மொத்தம் 837 விமான சேவைகளை அளிக்கும் உலகின் பரபரப்பான ஒற்றை ஓடுதளம் கொண்ட விமான நிலையமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் ஆகியவை டாட்டா அறக்கட்டளையுடன் இணைந்து புது தில்லியில் துப்புரவு பூங்காவை தொடங்கியுள்ளது.

- இந்திய கடலோர காவல் படை தினம், ஆண்டுதோறும், பிப்., 1ல் அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், கவர்னர் பங்கேற்று, நினைவு மலரை வெளியிட்டார். கடந்த, 1978ல், ஏழு கப்பல்களோடு துவங்கப்பட்ட கடலோரக் காவல் படை, தற்போது, 62 விமானங்கள், 134 கப்பல்கள் மற்றும் படகுகள் என, உலகின் நான்காவது பெரிய கடலோர காவல் படையாக உருவெடுத்துள்ளது.

- காலநிலையில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்ய, சிறந்த விஞ்ஞானிகள் உதவியுடன், பாரதியார் பல்கலைக் கழகத்தில், புதிய ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும், என, துணைவேந்தர், கணபதி தெரிவித்தார்.

- கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் சார்பில், கட்டுமான தொழில் கண்காட்சி, 'பில்ட் இன்டெக்-2018' நேற்று துவங்கியது. கண்காட்சியில், கட்டுமானத்துறையில் நவீன தொழில்நுட்பங்கள் இடம்பெற்றுள்ளன. தட்டுப்பாடான மணல், செங்கல் போன்ற பொருட்களுக்கு மாற்றுப் பொருட்கள், கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

- புது தில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லங்களின் பெயர்கள் "வைகைத் தமிழ் இல்லம்' எனவும், "பொதிகைத் தமிழ் இல்லம்' எனவும் பெயர் மாற்றி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

- இந்தியாவில் உள்ள 4 கோடி பசுக்களுக்கு முதல்கட்டமாக 50 கோடி செலவில் ஆதார் போல அடையாள அட்டை வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இது பசு சஞ்சிவினி( 2016) எனும் திட்டத்தில் கீழ் செய்யப்படுகிறது.

- அசாம் மாநிலத்தில் உள்ள கவ்காத்தியில் இரட்டை கோபுர உலக வர்த்தக மையம் நிர்மாணிக்கப்பட உள்ளது. தென் கிழக்கு நாடுகளுக்கான புதிய வர்த்தக மற்றும் வணிக நுழைவு வாயில் என்ற திட்டத்துடன் பொருளாதார இணைப்புகளை மேம்படுத்தும் வகையில் வர்த்தக மையம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

- இந்திய ஓபன் பாட்மிண்டன் போட்டியின் இறுதிச்சுற்றில் இந்தியாவின் பி.வி.சிந்து தோல்வி கண்டார். நடப்புச் சாம்பியனான சிந்து மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் அமெரிக்காவின் பெய்வென் ஸாங்கிடம் தோல்வி கண்டார்.

- சிறந்த கைத்தறி நெசவாளருக்கான தேசிய விருது 2016 , காஞ்சிபுரத்தைச் சேர்ந்த, கே. மகேஸ்வரி என்ற பெண் நெசவாளருக்கு கிடைத்துள்ளதாக, மத்திய அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதுபோல, சிறந்த பட்டு சேலை விற்பனைக்கான விருது, காஞ்சிபுரம்

அண்ணா பட்டு கூட்டுறவு சங்கத்திற்கும், சிறந்த நெசவாளர்களுக்கான தேசிய தரச்சான்றிதழ், மேலும் இரு நெசவாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- சரக்கு-சேவை வரியில்(ஜி.எஸ்.டி.) இந்திய அளவில் தமிழகம் 2-வது இடத்தில் உள்ளது. தமிழகத்தில் சரக்கு- சேவை வரி ( ஜி.எஸ்.டி.) மூலம் மத்திய அரசுக்கு அதிக வரி வருவாயை ஏற்படுத்திய மாநிலங்கள் பட்டியலில் முதல் 3 இடங்களை மராட்டியம் (16 சதவீதம்), தமிழ்நாடு (10 சதவீதம்), கர்நாடகம் (9 சதவீதம்) பெற்று இருக்கிறது. லட்சத்தீவு கடைசி இடத்தில் உள்ளது என்று பொருளாதார கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- ஜூனுக்குள் சந்திரயான் - 2 செலுத்த இஸ்ரோ திட்டம். அடுத்த, ஐந்து மாதங்களில், சந்திராயன் - 2 உட்பட, ஐந்து செயற்கைக்கோள்களை அனுப்புவதற்கு, இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு திட்டமிட்டுள்ளது1-சந்திரயான்), ஆம் 2008 பிப்ரவரி 22 ஆண்டுPSLV-XL C மூலம் 11ஏவப்பட்டது(.

- நிடி ஆயோக் தலைமை நிர்வாகியாக கடந்த 2016-ம் ஆண்டு பிப்ரவரியில் அமிதாப் கர்ந்த் நியமிக்கப்பட்டார். அவரது பதவி காலம் இம்மாதத்துடன் நிறைவடைகிறது. இந்நிலையில் பதவிகாலத்தை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து மத்திய அமைச்சரவைக்கான நியமன கமிட்டி உத்தரவிட்டது. இதையடுத்து அவர் 2019-ம் ஆண்டு ஜூன் 30-ம் தேதி வரை பதவியில் நீடிப்பார்.

- ஐந்தாவது தெற்காசிய பிராந்திய பொது கொள்முதல் (South Asia Region Public Procurement Network (SARPPN)) மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் கருத்துரு "Public Procurement and Service Delivery" ஆகும்.

- நாட்டிலேயே முதன்முறையாக ஐக்கிய அமீரகத்திற்கு ( UAE) வேலைக்காக செல்பவர்களுக்கு நன்னடத்தைச் சான்றிதழ் வழங்கும் முறையை கேரளா தொடங்கியுள்ளது.

- சாம்பியன்ஸ் லீக் தொடரில் ரியல் மாட்ரிட் அணிக்காக 100வது கோல் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை கிறிஸ்டியானோ ரொனால்டோ படைத்துள்ளார்.

- 23வது தேசிய மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் தொடர் ஒடிசாவின் கட்டாக்கில் நடந்தது. இத்தொடரில் மணிப்பூருக்கு எதிராக விளையாடி முதல் முறையாக வென்று தமிழக மகளிர் அணி வரலாற்று சாதனை படைத்தது.

- அடல் ஜன் ஆஹார் யோஜனா திட்டத்தின் நோக்கம் – ஏழை மக்களுக்கு உணவு வழங்கும் திட்டம்.

- சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாடு நடத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

- உலக அளவில் குறைந்த செலவில் இன்டர்நெட் வசதியைப் பெறுவதற்காக ஸ்டார்லிங்க் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ளது ஸ்பேஸ் எக்ஸ் விண்வெளி நிறுவனம். பால்கன் 9 ரக ராக்கெட்டில் இந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படும்.

- நேதாஜி சுபாஷ் சந்திரபோசுக்கு டெல்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இரு இடங்களில் மியூசியம் அமைக்கப்படும் என மத்திய கலாசார துறை அமைச்சர் மகேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

- ஈரான் அதிபர் ஹஸன் ரவுகானி பதவியேற்ற பின்னர் முதன்முறையாக இந்தியா வருகிறார். ஐதராபாத்தில் நடைபெறும் இஸ்லாமிய அறிஞர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்.

- ஆபத்தில் இருக்கும் பெண்களுக்கு உதவ அனைத்து செல்போன்களில் ஜி.பி.எஸ். வசதி பொருத்தும் மத்திய அரசின் உத்தரவு கட்டயாம் ஆகிறது.

- இந்தியக் கடற்படையின் மூன்றாவது ஸ்கிராபியன் வகுப்பு நீர்முழ்கிக் கப்பல் கராஞ்ச் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நீர்முழ்கிக்கப்பலை மஸாகான் டாக் லிமிடெட் தயாரித்துள்ளது.

- கர்நாடகாவில் பெண்களுக்கு தொடக்க கல்வி முதல் முதுகலை படிப்பு வரை இலவசக்கல்வி வழங்கப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

- சீனா விஞ்ஞானிகள் இரண்டு சிங்க வால் குரங்குகளை க்ளோனிங் முறையில் உருவாக்கி அவைகளுக்கு சாங் சாங், ஹியா ஹியா என்று பெயர் வைத்துள்ளனர். உலகிலேயே உயர் விலங்குகள் வரிசையில் உருவாக்கப்பட்டுள்ள முதல் உயிரினம் இதுவாகும்.

- உலகிலேயே முதல் முறையாக உயிரி எரிபொருளை பயன்படுத்தி அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு பறந்து சென்று ட்ரீம்லைனர் 787-9 விமானம் சாதனை படைத்துள்ளது.

- ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் உள்ள பன்ஸ்வார பகுதியில் பூமிக்கு அடியில் 300 அடி ஆழத்தில் 11 கோடி டன் தங்கம் இருப்பதை வரலாற்று ஆய்வாளர்களும், புவியியல் அறிஞர்களும் உறுதி செய்துள்ளனர்.

- 23வது குளிர்கால ஒலிம்பிக் போட்டி(பியாங்சங் 2018):

- இதில் முதல் தங்க பதக்கத்தை மகளிருக்கான ஸ்கையத்லான் கிராஸ் கன்ட்ரி போட்டியில் சுவீடன் வீராங்கனை சார்லோட் கல்லா வென்றார்.

- இந்த போட்டியில் இந்தியாவிலிருந்து இரண்டு வீரர்கள் மட்டுமே கலந்து கொண்டனர் இந்தியா ஒரு பதக்கம் கூட வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- போட்டியின் இறுதியில் பதக்கப்பட்டியலில் நார்வே அணி முதலிடத்தைப் பிடித்தது இரண்டவது மூன்றாவது இடங்களில் முறையே ஜெர்மனி மற்றும் கனடா நாடுகள் இருந்தன.

- லக்சம்பர்க் நகரில் நடைபெற்ற உலக ஜூனியர் டேபிள் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மனவ் விகாஸ் தக்கர் அமெரிக்காவின் கனக் ஜா வை எதிர்த்து மோதி தோல்வி அடைந்தார்.

- மகாராஷ்டிராவின் புனே நகரைச் சேர்ந்த சாகசங்களில் ஈடுபடும் பெண் சீத்தல் ரானே மகாஜன் சேலை அணிந்து, விமானத்தில் இருந்து “ஸ்கை டைவிங்” செய்து புதிய சாதனை படைத்துள்ளார்.

- இந்திய தனித்துவ அடையாள ஆணையம் ஆதார் தகவல்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த புதிய மெய்நிகர் ஐடியை(Virtual 10) உருவாக்கியுள்ளது. புதியதாக உருவாக்கப்பட்ட மெய்நிகர் ஐடி(Virtual 10) 16 இலக்கங்களை கொண்டுள்ளன.

- வங்கதேச அதிபராக கடந்த 2013-ம் ஆண்டு பதவியேற்ற அப்துல் ஹமீத் பதவி காலம் நிறைவடைவதையொட்டி அதிபர் தேர்தலில் மீண்டும் வங்கதேச அதிபராக அப்துல் ஹமீத் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

- பிளாஸ்ட் இந்தியா 2018-ன் 10-வது சர்வதேச பிளாஸ்டிக் கண்காட்சி குஜராத்தில் உள்ள காந்திநகரில் தொடங்கியது.

- பிரதமர் நரேந்திர மோடிக்கு பாலஸ்தீன நாட்டின் உயரிய கிராண்ட் காலர் விருது வழங்கப்பட்டது. பாலஸ்தீன அதிபர் அப்பாஸ் இதனை வழங்கினார்.

- இந்தியாவில் முதன்முறையாக திருநங்கைகளுக்கு கேரளாவில் கூட்டுறவு சங்கம் அமைக்கப்படும் என்று கூட்டுறவு துறை அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் கூறினார்.

- ஐக்கிய அரபு எமிரேட்சில் உள்ள துபாய் நகரம் , உயரமான கட்டடங்களுக்கு பெயர் பெற்றது. உலகின் மிக உயரமான சொகுசு ஓட்டல் , துபாயில் திறக்கப்பட்டது. கெவோரா என்று பெயரிடப்பட்டு உள்ள இந்த ஓட்டல் , 356 மீட்டர் உயரம் உடையது. துபாயின் மாரியட் மார்க்விஸ் என்ற நட்சத்திர ஓட்டல், 355 மீட்டர் உயரத்துடன், உலகின் மிக உயரமான ஓட்டல் என்ற அந்தஸ்தை பெற்றிருந்தது. தற்போது , கெவோரா ஓட்டல் அந்த பெருமையை தட்டிச் சென்றுள்ளது.

- சுவிட்சர்லாந்தின் செயின்ட் மோரிட்ஸ் ரிசார்ட் பகுதியில் முதல்முறையாக ஐஸ் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

- கடல்வழி தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்கும் வகையில் , நாடு முழுவதும் , பல்வேறு பெயர்களில் அவ்வப்போது ஒத்திகை நடக்கிறத .அந்த வரிசையி ல் கன்னியாகுமரி கடல் பகுதியில், 'சஜாக்' என்ற ஒத்திகை நடந்தது.

- கர்நாடக மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக மேகாலய மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பணியாற்றிய தினேஷ் மகேஷ்வரி நேற்று பதவியேற்று கொண்டார் . அவருக்குஆளுநர் விவாலா.ஆர். பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

- இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி அமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யபட்ட மூன்று நாள் 'தேசிய இளைஞர் விழா ' நொய்டாவில் தொடங்கிய து இளைஞர்களுக்கு தங்கள் வ லிமை என்ன என்பதை உணர செய்து அவர்களது பங்களிப்பை சமூகத்திற்கு சிறந்தமுறையில் வழங்க செய்யும் நோக்கத்தில் தேசிய இளைஞர் விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- தெலுங்கானாவில் அனைத்து பள்ளிகளிலும் தெலுங்கு மொழிப்பாடம் காட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது .ஒன்று முதல் 12ம் வகுப்பு வரை தெலுங்கு பாடத்தை கட்டாயமாக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது.2018 -2019ம் ஆண்டு முதல் அமல்படுத்த தெலுங்கானா அரசு அவசர சட்டம் பிறப்பிக்க உள்ளது.

- ஐக்கிய அரசு அமீரகத்தின் துபாய் நகரில் 6-வது சர்வதேச அரசுகள் மாநாடு நடைபெற்றது . இந்த நிகழ்ச்சியில், ஐக்கிய அரபு அமீரக பிரதமரும் துணை அதிபரும் துபை ஆட்சியாளருமான ஷேக் முகமது பின் ரஷித் அல் மக்தூம் , இந்தோனேசிய நிதி அமைச்சர் ஸ்ரீ முல்யானி இந்திராவதிக்கு உலகின் சிறந்த அமைச்சர் விருதை வழங்கினார்.

- கடந்த 1947ம் ஆண்டு இந்தியா பாகிஸ்தான் போரில் பயன்படுத்தப்பட்ட டகோடா போர் விமானம், புதுப்பிக்கப்பட்டு விமானப்படையின் பழங்கால போர் விமானப் பிரிவில் அடுத்த மாதம் இணைக்கப்பட உள்ளது . "டகோடா ரக விமானங்கள் 1930ம் ஆண்டுகளில் அறிமுகம் செய்யப்பட்டவை . காஷ்மீரின் லடாக் மற்றும் வடகிழக்கு பகுதிகளுக்கு ராணுவ வீரர்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டது.

- சிகாகோவிலிருந்து 1897ல் விவேகானந்தர் நாடு திரும்பிய நிகழ்வின் 122-வது ஆண்டு தினத்தையொட்டி பட்ஜ் பட்ஜ் பகுதியில் இருந்து ஷீல்தாவிற்கு வரும் 19ம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று கிழக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

❖ உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியத்தைத் தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் 3 ஆணையர்களின் ஊதியம் இரண்டு மடங்கு உயரும். இதன்மூலம் தற்போது ரூ . 90 ஆயிரத்தை ஊதியமாக பெற்று வந்த தேர்தல் ஆணையர்களின் ஊதியம் தற்போது ரூ.2.50 லட்சமாக உயர்ந்துள்ளது.

❖ ஊட்டி தாவரவியல் பூங்காவில் அருணாச்சல பிரதேசத்தை சேர்ந்த சுற்றுலா பயணிகள் அவர்களது 'போனம்' எனப்படும் பாரம்பரிய நடனமாடி மகிழ்ந்தனர் . இது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவந்த்தது.

❖ எல்.பி.ஜி. பஞ்சாயத்து திட்டத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் , ராஷ்டிரபதி பவனில் தொடங்கி வைத்தார். இது நுகர்வோர் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும் , பரஸ்பர கற்றல் மற்றும் அனுபவங்களை ஊக்குவிப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும் நோக்கத்தில் கொண்டுவரப்பட்டதாகும். இது பிரதான் மந்திரி உஜ்ஜவாலா யோஜனா வின் (PMUY) கீழ் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

❖ நாடு முழுவதும் 50 கோடி மக்களுக்கு தரமான , ஆரோக்கியமான சுகாதார வசதிகள் செய்து கொடுக்க வசதியாக இந்த பட்ஜெட்டில் ஆயுஷ்மான் பாரத் யோஜனா திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது .உலகத்திலேயே அரசு நிதியில் நடைபெறும் மிகப்பெரிய சுகாதார திட்டம் இதுவாகும் இந்த திட்டம் .சுகாதார துறையில் மிகப்பெரிய முன்னுதாரணமான மாற்றத்தை கொண்டு வரும்.

❖ தமிழகத்தில் முதல் முறையாக நடமாடும் நூலகம் தொடங்கி வைக்கப்பட்டது . பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நடமாடும் புத்தகக் கண்காட்சி தொடக்க விழா சென்னை கோடம்பாக்கம் அரசு மேனிலைப்பள்ளியில் நடந்தது .12 மாவட்டங்களில் இந்த திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

❖ நாட்டிலேயே முதல்முறையாக பாதாளச் சாக்கடையை சுத்தம் செய்யும் பணியில் , ரோபோ எந்திரத்தை களம் இறக்கும் பணியில் கேரள அரசு ஈடுபட்டுள்ளது. கேரளாவில் உள்ள ஸ்டார்ட்அப் நிறுவனமான 'ஜென்ரோபாட்டிக்ஸ்' தாங்கள் தயாரித்த ரோபோ எந்திரத்தை வெற்றிகரமாக சோதனை செய்து முடித்துள்ளது. இந்த ரோபோவுக்கு 'பெருச்சாளி' என பெயர் வைத்துள்ளது.

❖ சமீபத்தில் யுனெஸ்கோ அமைப்பு , நாட்டில் அழியும் தருவாயில் இருக்கும் வட்டாரங்களில் பேசப்பட்டுவரும் 42 மொழிகளை பட்டியலிட்டு அறிவித்துள்ளது . தமிழகத்தில் நீலகிரி

மாவட்டத்தில் பழங்குடியின மக்களால் பேசப்பட்டுவரும் கோட்டா , தோடா மொழிகள் அழிவின் பிடியில் இருக்கின்றன.

- உத்தரபிரதேச மாநிலம் லக்னோவில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. உத்தரபிரதேச மாநிலத்தின் புந்தேல்கண்ட் பகுதியில் ரூ.20,000 கோடி முதலீட்டில் ராணுவ தளவாடங்கள் உற்பத்தி மையம் அமையும் என பிரதமர் மோடி அறிவித்தார்.

- உலக சுகாதார அமைப்பு காற்று மாசுபாடு குறித்து ஓர் ஆய்வு நடத்தி , அந்த ஆய்வில் உலகில் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது .இதில் ஈரான் நாட்டின் ஷபோல் நகரம் உலகிலேயே அதிக மாசுபாட்டுடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளது இந்தப் பட்டியலில்., இந்தியாவின் குவாலியர் 2ம் இடத்தையும், அலகாபாத் 3வது இடத்தையும் பிடித்துள்ளது சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத் 4வது இடத்தில் உள்ளது இந்தியாவின் தலைநகரான . டெல்லி 11 வது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

- கடந்த 1868ல் ரசகுல்லாவை அறிமுகபடுத்திய மேற்குவங்க மாநில இனிப்பு வியாபாரி நோபின் சந்திர தாஸ் நினைவாக சிறப்பு தபால் உறை வெளியட தபால் துறை திட்டமிட்டுள்ளது. கடந்த நவம்பரில் ரசகுல்லாவுக்கு புவிசார் குறயீடு வழங்கப்பட்டது மற்றும் ரசகுல்லா கண்டுபிடித்து 150-ஆண்டுகள் ஆகிவிட்டது.

- தெலங்கானா மாநிலத் தலைநகரான ஹைதராபாத் ஹைடெக்ஸில் 3 நாட்கள் நடைபெறும் சர்வதேச தகவல் தொழில்நுட்ப மாநாட்டை டெல்லியிலிருந்து பிரதமர் நரேந்திர மோடி காணொளி மூலம் தொடங்கி வைத்தார் . இந்தியாவில் சர்வதேச தகவல் தொழில்நுட்பக் கருந்தரங்கு நடைபெறுவது இதுவே முதன்முறையாகும்.

- சவுதி அரசின் பாதுகாப்பாளர் சட்டத்தின்படி, பெண் ஒருவர் சுயமாக தொழில் தொடங்க வேண்டும் என்றால், தந்தை, சகோதரர் கணவர் ஆகியோரில் ஒருவரது அனுமதி பெற்றிருக்க வேண்டும். இந்த நிலையில் தனியார் துறையை விரிவுப்படுத்துவதை கருத்தில் கொண்டு ஆண்கள் அனுமதி இல்லாமல் இனி சவுதி பெண்கள் சொந்தமாக தொழில் தொடங்கலாம் என சவுதி அரசு தெரிவித்துள்ளது.

- பாராளுமன்றத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்காக உள்ளடக்கிய மற்றும் துணைபுரியும் வேலை சூழலை நிறுவுவதற்காக அதன் வளாகத்தில் அவர்கள் குழந்தைகளை பராமரித்து கொள்ளும் வகையில் மழலையர் கவனிப்பு வசதி விரைவில் அமைக்கப்படவுள்ளது.

- மகாராஷ்டிரா அரசாங்கம் சர்வதேச மகளிர் தினம் (மார்ச் 8, 2018) அன்று அஸ்மிட்டா யோஜனாவை தொடங்கவுள்ளது. இதன் மூலம் பள்ளிக்கூட மாணவிகள் மற்றும் பெண்களுக்கு மலிவான விலையில் (மானியமாக)சுகாதார பட்டைகள் வழங்கப்படும்.

- யுனிசெப் நிறுவன அறிக்கையின் படி பிறந்த குழந்தை இறப்பு விகிதத்தில் 52 குறைந்த வருமான நாடுகளின் பட்டியலில் இந்தியா 12-வது இடத்தில் உள்ளது.

- இஸ்ரோவில் தயாரிக்கப்படும் ஜி சாட் 11 என்ற செயற்கைக்கோள் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது .கிராமப்புறங்களுக்கு அதிவேக இணையத்தொடர்பு வசதி கிடைக்கும் என்பது இந்த செயற்கைக்கோளின் சிறப்பம்சம் . இஸ்ரோவால் தயாரிக்கப்பட்ட அதிகபட்ச எடைகொண்ட , அதாவது 5.7 டன் எடைகொண்ட செயற்கைக்கோள் இதுவாகும் .இந்தியாவில் இருந்து 4 டன் எடையுள்ள செயற்கைக்கோளை மட்டுமே விண்ணில் செலுத்த முடியும் எனவே ., இதனை பிரான்ஸ் நாட்டின் ஏரியனா ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்த உள்ளனர்.

- இலங்கை அரசின் சார்பாக புதிய தமிழ் தொலைக்காட்சி நிலையம் 'நேத்ரா(நல்லிணக்க தொலைக்காட்சி)' என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது . இலங்கை அரசின் சார்பாக கொழும்பில் ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைமையகத்தில் நல்லிணக்க தொலைக்காட்சியை அதிபர் மைத்திரிபால சிரிசேன துவக்கி வைத்தார்.

- தெலங்கானா மாநில அரசு மாநிலத்தின் சிறந்த தொழில்நுட்ப கூட்டணிக்காக தைவானுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ( MOU) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த உடன்படிக்கை ஹைதராபாத்தில் நடைபெற்ற உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரஸ் ( WCIT) 2018, மாநாட்டில் போடப்பட்டது.

- அரியானா மாநிலம் 'பரிவர்த்தன்' திட்டத்தை தொடங்கிவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 10 சிக்கல்களை களைய திட்டமிட்டு அமல்படுத்திவுள்ளது சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் , விவசாயத்தை லாபம் மற்றும் நிலையான தாக மாற்ற , ஸ்வச்ச் பாரத்தை செயல்படுத்துதல் , இளைஞர்களை ஊக்குவித்தல் , சந்தைப் பகுதிகள் மோசமடைத லை களைய , காற்று மாசுபடுத்தல், திறமையான காவல் துறை , அடையாளங்காணல் சேவைகள் மற்றும் சாலை ஒழுங்கு மற்றும் நடத்தை உறுதி செய்தல்.

- உலகிலேயே முதல் முறையாக ரஷ்யாவில் உள்ள அணுஉலை ஒன்றுக்கு பாதுகாப்புடன் கட்டமைக்கப்பட்ட அணுஉலை என்ற சர்வதேச விருது கிடைத்திருக்கிறது .1200 மெகா வாட் மின் உற்பத்தி திறன் கொண்ட இந்த அணுஉலைக்குள் முதன் முறையாக ஊடகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

- இந்தியாவின் தனித்துவ அடையாள ஆணையம் , 'பாள் ஆதார்' அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நீல வண்ண அட்டை ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு வழங்கப்பபடும். இதைப் பெற, பயோமெட்ரிக் விவரங்கள் தேவையில்லை.

- ஆஸ்திரேலியாவில் மைக்கேல் மெக்கார்மக் நாட்டின் தேசிய கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், புதிய துணை பிரதம மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- பல்கேரியாவின் சோபியாவின் 69 வது ஸ்ட்ராண்ட்ஜா மெமோரியல் குத்துச்சண்டை போட்டியில் இந்திய குத்துச்சண்டை வீரர்கள் விகாஸ் கிரிஷன் மற்றும் அமித் பங்ஹால் ஆகியோர் தங்க பதக்கங்களை வென்றனர். அதே வேளையில் MC மேரி கோம், சீமா பூனியா மற்றும் கௌரவ் சோலங்கி ஆகியோர் வெள்ளி பதக்கங்களை வென்றனர்.

- முன்னாள் கேபினட் செயலாளர் TSR சுப்பிரமணியன் காலமானார். 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து மார்ச் 1998 வரை அமைச்சரவை செயலாளராக பணியாற்றினார்.

- பிரதமர் மந்தரி உஜ்வாலா யோஜனாவின் (PMUY) இலக்கு ஐந்து கோடி மக்களிலிருந்து எட்டு கோடியாக உயர்த்துவதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. PMUY என்பது நாடு முழுவதும் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் எல்பிஜி மூலம் சுத்தமான சமையல் எரிபொருளை வழங்குவதாகும்.

- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ( NHAI) இந்தியாவில் "நீங்கள் பயன்படுத்துவது போல் செலுத்த வேண்டும்" (“pay as you use”)என்ற ஒரு பைலட் திட்டத்தை டெல்லி-மும்பை இடையே உள்ள சுங்கச்சாவடிகளில் தொடங்கிவுள்ளது.

- யு.எஸ். சேம்பர் ஆஃப் காமர்ஸின் உலகளாவிய கண்டுபிடிப்பு கொள்கை மையம் ( GIPC) இந்தியா 50 பொருளாதாரங்களில் 44 வது இடத்தில் உள்ளது என்று கூறியுள்ளது. 2017 ஆம் ஆண்டு இந்தியா 45 வது இடத்தில் இருந்தது தற்போது 44 வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

- முன்னாள் இந்திய அணியின் கேப்டன் சவுரவ் கங்குலி “A Century is not enough” என்ற தனது சுயசரிதை புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இந்த புத்தகத்தை கவுதம் பட்டாச்சார்யாவும் இணைந்து எழுதியுள்ளார்.

- மத்திய அரசு கிராம மேலாண்மை மையம், சுகாதாரம், கல்வி, குடிநீர், மருத்துவம், சாலை வசதி ஆகியவைகளின் அடிப்படையில் அனைத்து மாநிலங்களிலும் சிறந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து தீன தயாள் உபாத்யாய கிராம விருதுகளை வழங்கி வருகிறது. இந்த வரிசையில் ராமநாதபுரம் மாவட்டம் புதுமடம் கிராமம் தமிழ்நாட்டின் சிறந்த ஊராட்சியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஹைதராபாத் மாநகராட்சிக்கு உட்பட்ட பாக்ங்கம் பள்ளி எனும் இடத்தில் ஒரே நேரத்தில் 15,320 பேர் சேர்ந்து 3நிமிடங்களில் ஆஜமாபாத்திலிருந்து சுந்தரய்ய பூங்கா வரை உள்ள சாலைகளைச் சுத்தம் செய்து கின்னஸ் சாதனை படைத்தனர்.

- சீனா அரசு எதிரி நாட்டு விமானங்களை கண்காணிக்க ரேடாருடன் கூடிய புதிய உளவு விமானத்தை தயாரித்துள்ளது. இதன் மூலம் சீனாவுக்குள் அத்துமீறி நுழையும் விமானங்களை எளிதில் கண்டறிய முடியும். இந்த விமானத்திற்கு கே ஜே 600 என பெயரிடப்பட்டுள்ளது.

- சீனா சூரிய மின் தகடுகள் பொதியப்பெற்ற உலகின் இரண்டாவது ஒளி மின்னழுத்த நெடுஞ்சாலையை ஷன்டாங் மாகாணத்தில் வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. உலகின் முதல் ஒளி மின்னழுத்த நெடுஞ்சாலை பிரான்ஸ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

- அண்டார்டிகா கடல் பகுதியில் ஆராய்ச்சி செய்வதற்காக, ஆஸ்திரேலியா அரசின் அறிவியல் அமைப்பான சி.எஸ்.ஐ.ஆர்.ஓ., ஆளில்லாமல் கடலில் பயணிக்கும் செயில் ட்ரோன் என்ற ஆய்வுப் படகை பயன்படுத்தவிருக்கிறது.

- அமெரிக்க ஸ்டார்ட் அப் விண்வெளி நிறுவனமான ராக்கர் ஆய்வகம் அரசு விண்வெளி நிறுவனங்களின் எந்தவித உதவியுமின்றி நியூசிலாந்தில் உள்ள தன்னுடைய தனியார் செயற்க்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து விண்வெளிக்கு மூன்று சிறிய செயற்க்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்திய உலகின் முதல் தனியார் நிறுவனம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

- ஆஸ்திரேலியா விஞ்ஞானிகள் பயிர்களின் உற்பத்தியை மூன்று மடங்கு அதிகரிக்கும் உலகின் முதல் வேகமான இனப்பெருக்க தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளனர். DS பாரடே எனும் புதிய கோதுமை வகையை இத்தொழில்நுட்பத்தின் மூலம் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஆசிய உள்ளரங்கு தடகள போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் ஆண்களுக்கான 60 மீ ஓட்டத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இலக்கியதாசன் பந்தய தூரத்தை 6.67வினாடிகளில் கடந்து 3வது இடத்தைப்பிடித்து வெண்கலப்பதக்கம் வென்று புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

## முக்கியமான நாட்கள் மற்றும் அதன் கருப்பொருள்கள்

- **World Wetlands Day** 2nd February
- The 2018 theme ‘Wetlands for a sustainable urban future
- **World Cancer Day – 04 February**
- The theme for the year 2018 is “We can. I can”.
- **World Radio Day - 13 February**
- The Theme of the world radio day for the year 2018 is ‘Radio and Sports’.
- **World Day of Social Justice - 20 February**
- India’s first radio festival was held at New Delhi to mark World Radio Day.
- The theme for the year 2018 is “Workers on the Move: The Quest for Social Justice”.
- **International Mother Language Day - 21 February**
- The theme of 2018 International Mother Language Day is ‘Linguistic diversity and multilingualism count for sustainable development’.

# பிப்ரவரி நடப்பு நிகழ்வுகள்-2018




